# <u>மயிலாடுதுறை நகராட்சி</u>

<u>குறள்:</u> தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு

<u>பொருள்:</u> ஒரு செயலை தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபட சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும் .

கூட்ட எண்: 15/2023

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்:28.03.2023

<u>சாதாரண கூட்டம்</u>

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரண கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரண கூட்டம் 2023–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30.03.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

**1)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியோர்களின் பிப்ரவரி மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண். 401 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**2)** இந்நகராட்சியின்2022–2023–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 2023–2024–ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் வரவு– செலவு அறிக்கையினை தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.0380/2022/பி1**

**மன்றத் தீர்மானம் எண். 402 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கப்பட்டது.**

3) மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே சித்தர்காடு தலைமை நீரேற்ற நிலையத்திலிருந்து குடிநீர் இறைப்பு செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவந்தது. இந்நிலையில் புதியகுடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் முடிகண்டநல்லூர் தலைமை நீரேற்று நிலையம் (கொள்ளிடம் ஆற்றிலிருந்து) மூலம் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டம் கடந்த 2003ஆம் ஆண்டு முதல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி பழைய குடிநீர் பகிர்மான குழாயில் உள்ள இணைப்பை துண்டித்துவிட்டு புதியதாக அமைக்கப்பட்ட கொள்ளிடம் கூட்டுகுடிநீர் திட்டத்தின்கீழ் வைப்புதொகைபெறப்பட்டு புதிய இணைப்பு வழங்கப்பட்டு அதற்கான குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பட்டியலில் இணைக்கப்பட்ட உபயோகதாரர்களுக்கு ஏற்கனவே உள்ள பழைய இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் கேட்புகள் நீக்கம் செய்யப்படாமலும், புதியகுடிநீர் இணைப்புகள் வழங்கப்படாமலும் தொடர்ந்துஇணைக்கப்பட்டுள்ளபட்டியலின்படி 2003-2004ம் நிதியாண்டுமுதல் 2022-2023ம் நிதியாண்டுவரை**ரூ.15,91,773/-**க்கானகேட்புகளைவருவாய் உதவியாளர்கள், வருவாய் ஆய்வர்கள், வருவாய் அலுவலர் மற்றும் பொறியாளர் பிரிவு குழாய் பொருத்துனர், உதவிப்பொறியாளர்கள் ஆகியோரால் களஆய்வு செய்துநீக்கம் செய்திடசான்றுஅளித்ததன்பேரில் குடிநீர் கேட்பினைநீக்கம் செய்திடமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பழையகாவேரி பகிர்மான குழாயிலிருந்து குடிநீர் விநியோகத்திற்கு கேட்புகள் எழுப்பப்பட்டு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் புதிய குடிநீர் இணைப்புகள் எடுக்கப்படாமல் இனம் கண்டுள்ள இப்பட்டியலின் கேட்பினை நீக்கம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 5087/2019/இ2**

**மன்றத் தீர்மானம் எண். 403 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**4)** மயிலாடுதுறைநகராட்சியின் எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும், நிலுவையாக உள்ள பாதாளசாக்கடை கட்டணத்தை வசூல் செய்வதற்கு கேட்பு அறிவிப்பு (Demand Notice) அனைத்து வார்டுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவிப்பு வழங்கப்படும்போது பாதாளசாக்கடை இணைப்பிற்கு இணைப்பு வழங்கப்படாமலேயே தவறுதலாக தொடர்ந்து கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும், இணைப்பு வழங்கப்பட்ட தேதிக்கு பதிலாக வைப்புதொகை செலுத்திய நாளிலிருந்து கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும், தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை ரத்து செய்து தருமாறும் புகார்கள் வரப்பெற்றுள்ளன. இப்புகார்களை சரிசெய்திட வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்கள் களஆய்வு மேற்கொண்டு அறிக்கை வழங்கியுள்ளதை வருவாய் ஆய்வர்கள் மற்றும் வருவாய் அலுவலர், உதவிப்பொறியாளர்கள் மேலாய்வு மேற்கொண்டு தவறாக கேட்பு எழுப்பப்பட்டுள்ள பாதாளசாக்கடை கேட்புகளை நீக்கம் செய்திட வழங்கிய சான்றின்படியும் நீக்கம் செய்யபட வேண்டிய கேட்புகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் நிலுவைத் தொகை **ரூ.36,31,578/-**ஆகும். இதில் இதுநாள்வரை பாதாளசாக்கடை வைப்புத்தொகை செலுத்தி இணைப்பு பெறாமல் உள்ள மொத்த கேட்புகளின் நிலுவைத்தொகைரூ.**34,74,999/-ஐ** இணைப்பு பட்டியல்-1 மற்றும் 1(A) ஆகவும், பாதாளசாக்கடை வழங்கப்பட்ட தேதிக்கு பதிலாக முன் வைப்புத்தொகை செலுத்திய நாளிலிருந்து கேட்பு எழுப்பபட்டு தொகை செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ள கேட்புகளின் நிலுவைத்தொகை ரூ.**1,56,579/-ஐ** இணைப்பு பட்டியல்-2 மற்றும் 2(A) ஆகவும் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, இணைப்பு பட்டியல் -1, 1(A) மற்றும் பட்டியல்-2, 2(A) ல் குறிப்பிட்டுள்ள கேட்புகளை உரியவாறு **(ரூ.36,31,578/-)** நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பாதாளசாக்கடை இணைப்பிற்கு இணைப்பு வழங்கப்படாமலேயே தவறுதலாக தொடர்ந்து கேட்புகள் எழுப்பப்பட்டுள்ளதாகவும், இணைப்பு வழங்கப்பட்ட தேதிக்கு பதிலாக வைப்புதொகை செலுத்திய நாளிலிருந்து எழுப்பப்பட்டுள்ள கேட்புகளின் நிலுவைத் தொகை **ரூ.36,31,578/-ஐ** நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 7724/2023/இ3**
**<u>மன்றத் தீர்மானம் எண். 404 நாள்: 30.03.2023</u>**

**<u>அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.</u>**

**5)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.29, பனந்தோப்பு தெருவில் 8, 8ஏ கதவு எண் கொண்ட டவுன் சர்வே வார்டு 9 பிளாக் 2–இல் T.S.No.76/1A-இல் 1,97,327 சதுரடி மனையில் உள்ள இரு கட்டிடங்கள் திரு.பி.எம்.ரஹமத்துல்லா என்பவருக்கு சொந்தமானது. மேற்படி இரு கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் வரிவிதிப்பு எண்கள் 097/029/900241, 097/029/900243 ஆகும். அதன் உரிமையார் திருபி.எம்.ரஹமத்துல்லா இறந்த பின் அவரின் வாரிசுகள் ஒன்று சேர்ந்து திரு.எம்.நூருல்ஹலிம் என்பவருக்கு மேற்படி இடத்தை விற்பனை செய்ய பவர் எழுதிக்கொடுத்துள்ளனர். அதன்படி பவர் ஏஜெனாடான திரு.எம்.நூருல்ஹலிம் அவர்கள் மனையில் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு பி.எம்.ஆர் நகர் என்ற பெயரில் 45 மனைகளை அந்த இடத்தில் அமைத்து மயிலாடுதுறை நகராட்சி 1632/2006 நகர்மன்ற தீர்மானத்தின்படியும் மற்றும் ம.வ/ந.ஊ.து.இ(தி.ம) எண்.116/2006ன் டியும் மனைகளுக்கு அனுமதி பெற்றுள்ளார். அதன்படி 45 மனைகளுக்கு 08.01.2002 முதல் காலிமனை வரியாக அறையாண்டிற்கு ரூ.1,38,207 என நிர்ணயம் செய்து காலிமனைவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடத்திற்கான சொத்துவரியினை நீக்கம் செய்யாமலேயே காலிமனைவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே

திரு.பி.எம்.ரஹமத்துல்லா பெயரில் உள்ள சொத்துவரி விதிப்பு எண் 097/029/900241-ற்கு **2008–2009**ஆம் ஆண்டு முதல் **2022–2023**ஆம் ஆண்டு வரை நிலுவை சொத்துவரித்தொகை ரூ.**2,09,622** மற்றும் 097/029/900243--ற்கு **2008–2009**ஆம் ஆண்டு முதல் **2022–2023**ஆம் ஆண்டு வரை நிலுவை சொத்துவரித்தொகை ரூ.**66,495** ஆக கூடுதல் தொகை ரூ.**2,76,117/–** யை காலிமனைவரி விதிப்பு செய்யப்பட்ட நாளான **01.04.2008** முதல் **2022–2023** வரையிலான காலத்திற்கு நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.874/2023/அ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 405, நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**6)** இந்நகராட்சி வார்டு எண்.**14**, எம்.ஜி.ரோட்டில் கதவு எண்.**50** கொண்டு இடத்தில் தரைதளம் வரிவிதிப்பு எண்.**097/50920**, முதல்தளம் வரிவிதிப்பு எண்.**097/50921**, இரண்டாம் தளம் வரிவிதிப்பு எண்.**097/50922**, மூன்றாம் தளம் வரிவிதிப்பு எண்.**097/50923**, நான்காம் தளம் வரிவிதிப்பு எண்.**097/50924** என தனித்தனியே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் மூன்றாம் தளம் வரிவிதிப்பு எண்.**097/50923**, நான்காம் தளம் வரிவிதிப்பு எண்.**097/50924** கொண்ட இரு தளங்கள் உள்ள அறைகளை அகற்றிவிட்டு மூன்றாம் தளத்தில் ஐந்து குடியிருப்புகளும், நான்காம் தளத்தில் ஐந்து வீடுகளும் கட்டப்பட்டு **01.04.2020** முதல் புதியதாக வரிவிதிப்பு செய்யப்பட்டது. இதன் மூன்றாம் தளம் மற்றும் நான்காம் தளத்தின் பழைய வரிவிதிப்பு எண்கள் **097/50923, 097/50924** தொகை முறையே ரூ.**44960/–** ரூ.**44960/–**ஆக கூடுதல் தொகை ரூ.**89920/–**ஆகும். இக்கேட்பினை **01.04.2020** முதல் நீக்கம் செய்ய வருவாய் உதவியாளர்,வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்றளிக்கப்பட்டுள்ளது. மாதாந்திரப்பட்டியலில் பக்கம் எண்.**5** மற்றும் **7** இல் பதியப்பட்டுள்ளதை பார்வையிட்டு பழைய வரிவிதிப்பு எண்கள் **097/50923, 097/50924**–யை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5301/2022/அ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 406 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**7)** மயிலாடுதுறை நகரம் கி.பி **12–**ஆம் நூற்றாண்டுவரை மயிலை என்றழைக்கப்பட்டு "மாயூரபுரம்" என்றாகி பின்னர் மாயுரம் என மருவி கி.பி **18–**ஆம் நூற்றாண்டு முதல் "மாயவரம்" எனவும் **1948** முதல் மாயூரம் என்று அழைக்கப்பட்டு வந்த இந்நகரம் தமிழக அரசின் வருவாய்த்துறை அரசாணை எண்.**974** நாள்:**08.06.1982**படி மயிலாடுதுறை எனப்பெயர் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டு, **27.06.1982** முதல் மயிலாடுதுறை என்று அழைக்கப்படுகிறது . இந்நகராட்சி **1866** ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதாகும். இந்நகரம் "தள்ளா விளையும் தக்காரும் தாழ்விலாச் செய்வரும் சேர்வது நாடு'' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க காவேரி டெல்டாவில் அமையப்பெற்ற சீரும் சிறப்புமான நகரமாகும். மேலும் **2016–**ஆம் ஆண்டுடன் **150–**வது ஆண்டினை எட்டிய பழைமை புகழ் வாய்ந்த நகராட்சியாகும். தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்:**498, 22.03.1984–**ந் தேதியிட்ட அரசாணையின்படி **28.03.1984** தேதி முதல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு **36** வார்டுகள் அடங்கிய நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு **11.27** சதுரகிலோ மீட்டர்களாகும்.

மேலும், மயிலாடுதுறை நகராட்சி ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருந்தது. தஞ்சை மாவட்டத்திலிருந்து நாகப்பட்டினத்தை தலைநகரமாக கொண்டு 18.09.1991 முதல் நாகப்பட்டினம் மாவட்டம் பிரிக்கப்பட்ட போது இந்நகராட்சி நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமையப்பெற்றது. தற்போது அரசாணை எண்:G.O (MS) No.796 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள்:28.12.2020 ன்படி நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து மயிலாடுதறையினை தலைநகராக கொண்டு மயிலாடுதறை தனி மாவட்டமாக 28.12.2020 முதல் செயல்பட்டு வருகிறது.

**மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குள் கீழ்கண்ட வருவாய் கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கூறைநாடு முழுவதும் | 2. | பண்டாரவாடை மாப்படுகை |
| 3. | திருவிழந்தூர் | 4. | சித்தர்காடு |
| 5. | பட்டமங்கலம் | 6. | மயிலாடுதுறை (ஊரகம்) |
| 7. | வள்ளலாகரம் | 8. | மன்னம்பந்தல் |

மயிலாடுதுறை நகராட்சியின் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை , ஆண்கள்: 41888 பெண்கள்: 43744 மொத்தம்: 85632 ஆகும். நகராட்சியின் சராசரி ஆண்டு வருமானம் கேட்பு பட்டியல்படி கடந்த மூன்றாண்டுகளின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.21.16 கோடியும், 2021–2022ஆம் ஆண்டின் வருமானம் ரூ.22.22 கோடியாகும்.

- இந்நகராட்சியில் முடிகண்ட நல்லூர் கொள்ளிடம் ஆற்றில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி 68 லட்சம் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறப்பட்டு, மேல்நிலை தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. தினசரி காலை 6.00 முதல் 8.00 வரை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தினசரி நபர் ஒருவருக்கு 92 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. மொத்தம் 10693குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. இதில் வீட்டு பயன்களுக்கான குடிநீர் இணைப்பு 10384–ம் வணிக உபயோகத்திற்காக 309 ஆகும்.

- இந்நகராட்சியில் 36 வார்டுகளிலும் 3485 தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மழை நீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.
- நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 83 குளங்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மயிலாடுதுறை நகராட்சிக்குட்ட பகுதிகளில் 68 பூங்காக்கள் உள்ளது.
- மயிலாடுதுறை நகராட்சியில் மொத்தம் 10896 பாதாள சாக்கடை இணைப்புகள் உள்ளன, நிரேற்று நிலையங்களில் பம்ப் செய்யப்படும் கழிவு நீர் இந்நகருக்கு கிழக்கே சுமார் 2.88 கி.மீ தூரத்தில் உள்ள ஆறுபாதி என்னும் கிராமத்தில் நகராட்சியால் நிலம் வாங்கப்பட்டு, சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- மயிலாடுதுறை நகராட்சியில் தினமும் , மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் 100% வீடு தோறும் சேகரம் செய்யப்பட்டு தினமும் 29 டன் திடக்கழிவுகள் உற்பத்தி ஆகிறது. அதில் , 3 நுண்ணுயிர் கிடங்குகளின் மூலம் , மக்கும் கழிவுகள் இயற்கை உரமாக உற்பத்தி செய்யப்பட்டு, இயற்கை விவசாய ஆர்வலர்களுக்கு இலவசமாக வழங்கபபடுகிறது. மேலும் மறுசுழற்சிக்கு பயன்படாத நெகிழி கழிவுகள் தனியார் சிமெண்ட் ஆலைகளுக்க எரிபொருள் பயன்பாட்டிற்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
- மயிலாடுதுறை நகராட்சி பழமைவாய்ந்த வரலாற்று சிறப்பு மிக்க கோவில்களை உடைய நகரமாகும். மயிலாடுதுறையில் சரித்திர சிறப்பு வாய்ந்த மாயூரநாதர் கோவில் மற்றும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான பரிமள ரெங்கநாதர் கோவில் முதலிய ஆன்மீக தலங்கள் அமையப்பெற்றுள்ளது.

- மயிலாடுதுறையில் ஐப்பசி மாதம் முழுவதும் மாயூர நாதர் சுவாமி, பரிமள ரெங்கநாதர் சுவாமி , காசி விஸ்வநாதர் சுவாமி, வதனீஸ்வரர் சுவாமி ஆகியவை தினமும் மயிலாடுதுறை காவேரியில் எழுந்தருளி துலாக்கட்டத்தில் துலா உற்சவம் தீர்த்தவாரி கொடுக்கும் உற்சவ விழாவிற்காக பல மாவட்டங்களிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் பெருவாரியாக கலந்து கொள்கின்றனர், மேற்கண்ட துலா உற்சவம் திருவிழா அறிவிக்கப்பட்ட திருவிழாவாக (Notified festival) சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

- மயிலாடுதுறையை சுற்றி பல நவக்கிரக கோவில்கள் உள்ளது, உலகப் புகழ்பெற்ற திருமணஞ்சேரி கோவில், திருக்கடையூர் கோவில் மற்றும் திருநள்ளாறு கோவில் உள்ளிட்ட பல முக்கிய தலங்களும் இந்நகரின் அருகில் அமைந்துள்ளது. அவற்றிற்கு வரும் யாத்ரீகர்கள் வழிபாடு செய்வதற்கு தங்கிச்செல்ல மயிலாடுதுறை நகரம் ஆன்மீகம் வளர்க்கும் முக்கிய மையப்பகுதியாக அமைந்துள்ளது.

பார்வையில் கண்டுள்ள அரசாணையின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மயிலாடுதறை நகராட்சி ரூ,15 கோடிக்கு மேல் வருவாய் உள்ள நகராட்சி என்பதால் தேர்வு நிலையிலிருந்து சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்திட தகுதியான நகராட்சியாகும். மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தற்போது பழைய பேருந்து நிலையம், மற்றும் தற்காலிக பேருந்து நிலையம் என இரண்டு பேருந்து நிலையம் உள்ளது . இந்நிலையில் நகரப்பகுதியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு , நகராட்சியிலிருந்து 1.5 கி.மீ தூரத்தில் மணக்குடி கிராமத்தில் ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் நகரப்பகுதிக்கு அருகாமையில் உள்ள மன்னப்பந்தல் கிராமத்தில் தற்போது புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டப்பட்டு, பணிகள் முடிவு பெரும் நிலையில் உள்ளது. மேற்கண்ட மணக்குடி புதிய பேருந்து நிலையம் மற்றும் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் அருகில், மயிலாடுதறை–சீர்காழி நெடுஞ்சாலையிலிருந்து மயிலாடுதுறை–திருவாரூர் நெடுஞ்சாலை மற்றும் மயிலாடுதுறை–தரங்கம்பாடி நெடுஞ்சாலை இணைக்கும் விதமாக சுற்றுப்புற வழிச்சாலை அமையவுள்ளது.

எனவே மேற்கண்ட மணக்குடி மற்றும் மன்னம்பந்தல் ஊராட்சிப்பகுதியினை நகராட்சியோடு இணைத்தால், நகராட்சியின் பரப்பளவு அதிகரித்து மேலும் வருவாய் பெருகும்.

எனவே, நகராட்சிகளை தரம் உயர்த்ததல் தொடர்பான பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படி சராசரி ஆண்டு வருமானம் ரூ.15 கோடிக்கு மேல் வருவாய் உள்ள நகராட்சிகளை சிறப்பு நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தலாம் என வகைபடுத்தப்பட்டுளதன் அடிப்படையில் மாவட்டத்தின் தலைநகரமான மயிலாடுதுறை நகராட்சியுடன் மணக்குடி மற்றும் மன்னம்பந்தல் இரண்டு ஊராட்சிகளை இணைத்து மயிலாடுதுறை நகராட்சியினை சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி உரிய ஆணை பிறப்பிக்க ஆவன செய்யக்கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**: மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்.1035 /2023/எப்1.**

**<u>மன்றத் தீர்மானம் எண். 407 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**8)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கடைகளுக்கான தொழில்வரி விதிப்பு கேட்பில் உள்ளவைகளில் இரட்டை கேட்பிற்கான வரிவிதிப்புகள் மற்றும் இடிந்த நிலையில் உள்ள கடைகள், வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட கடைகள், காலி செய்யப்பட்ட வரிவிதிப்புக்களின் தொழில்வரி விதிப்பு கேட்புகளை நீக்கம் செய்திட வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர்களால் களஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி நாளது தேதிவரை (3,5,17,18,19,20,21,23,25,29,28,34,) வார்டு பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொழில்வரி விதிப்புகளின் உள்ள கேட்புகளை வசூல் செய்ய எவ்வித வழிவகையும் இல்லை என வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் ஆய்வர் ஆகியோர்களால் தெழில்வரி விதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து சான்று வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நீக்கம் செய்ய வேண்டியத் தொழில்வரி விதிப்புகளின் எண்ணிக்கை 102 ஆகும். மேற்படித் தொழில்வரி நீக்கம் செய்ய வேண்டிய கூடுதல் தொகை ரூ.4,68,721/-யை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:653/2023/அ6**

**<u>மன்றத் தீர்மானம் எண். 408, நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஒத்திவைக்கப்பட்டது.**

**9)** இந்நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் சொத்துவரிவிதிப்பு செய்யும் பொழுது ஏற்கனவே விதிக்கப்பட்ட காலிமனை வரியை நீக்கம் செய்யாமல் சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நீக்கம் செய்யவேண்டிய காலிமனை வரி இனங்களை நீக்கம் செய்திட வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) ஆகியோரால் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடங்களில் கட்டிடம் கட்டப்பட்டு சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்டு நாளது தேதிவரை சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் ஏற்கனவே உள்ள காலிமனை வரிவிதிப்புகள் நீக்கம் செய்யப்படாமல் நீண்ட நாட்கள் நிலுவையாக உள்ளது எனவும் மேற்படி சொத்துவரிவிதிப்பு செய்யப்பட்ட அரையாண்டிலிருந்து காலிமனை வரிவிதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்று வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நீக்கம் செய்யவேண்டிய காலிமனை வரிவிதிப்புகளின் கேட்புத் தொகை ரூ. 33,03,284/-யை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** காலிமனை வரியை நீக்கம் செய்யாமல் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே காலிமனை வரி கேட்பினை நீக்கம் செய்ய வருவாய் உதவியாளர், உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே காலிமனை வரி கேட்பினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4987/2021/அ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 409 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஒத்திவைக்கப்பட்டது.**

**10)** இந்நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் சொத்து வரிவிதிப்பு செய்யும் பொழுது ஏற்கனவே விதிக்கப்பட்ட பழைய சொத்து வரியை நீக்கம் செய்யாமல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தவறுதலாக எழுப்பப்பட்டுள்ள சொத்து வரிவிதிப்பு இனங்களை நீக்கம் செய்திட வருவாய் தவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) ஆகியோரால் கள ஆய்வு செய்யப்பட்டதில் பழைய வீட்டை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டு சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டு புதிய சொத்துவரி வசூல் செய்யப்பட்டு வருவதாகவும் ஏற்கனவே உள்ள பழைய சொத்து வரிவிதிப்பு நீக்கம் செய்யாமல் நீண்ட நாட்கள் நிலுவையாக உள்ளது எனவும் புதிய சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டதால் பழைய வரிவிதிப்புளை வசூல் செய்ய எவ்வித வழிவகையும் இல்லை என வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் பழைய சொத்து வரிவதிப்புகளை நீக்கம் செய்திட வார்டு வாரியாக பட்டியல் தயார் செய்து சான்று வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் நீக்கம் செய்ய வேண்டிய சொத்து வரிவிதிப்புகளின் கேட்புத் தொகை ரூ.1910844 /-யை நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2.பழைய சொத்து வரியை நீக்கம் செய்யாமல் புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே பழைய சொத்து வரி கேட்பினை நீக்கம் செய்ய வருவாய் உதவியாளர், வருவாய் ஆய்வர், வருவாய் ஆய்வர்(சிறப்பு) மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே சொத்து வரி கேட்பினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4987/2021/அ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 410 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: ஒத்திவைக்கப்பட்டது.**

**11)** மயிலாடுதுறை நகராட்சியில் பொது சுகாதார பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள **TN.51.S.5146** எண்ணுள்ள டிப்பர் லாரியின் தகுதி சான்று முடிவுற்றதால் நடப்பாண்டிற்கு தகுதி சான்று பெறதக்க வகையில் பழுது நீக்கம் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,63,500/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பொது சுகாதார வகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.896/2023/இ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 411 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**12)** மயிலாடுதுறை நகராட்சியில் பொறியியல் பிரிவு கட்டுப்பாட்டில் உள்ள **TN.82.J.0077** எண்ணுள்ள பாதாள சாக்கடை கழிவு மண் எடுக்கும் சில்ட் மெஷின் தகுதி சான்று முடிவுற்றதால் நடப்பாண்டிற்கு தகுதி சான்று பெறதக்க வகையில் பழுது நீக்கம் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,18,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பாதாள சாக்கடை கழிவு மண் எடுக்கும் சில்ட் வகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.815/2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 412 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**13)** மயிலாடுதுறை நகராட்சியில் நகர்மன்ற தலைவரின் பயன் பாட்டில் உள்ள **TN.82 L.5488** எண்ணுள்ள Scorpio வாகனத்திற்கு பொறுத்தப்பட வேண்டிய உதிரி பாகங்கள் மற்றும் இதர உபகர்ணங்கள் கொள்முதல் செய்து பொருத்தும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.74,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி நகர்மன்ற தலைவர் அவர்களின் வகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.694 /2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 413 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**14)** மயிலாடுதுறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான 4 எண்ணிக்கை Laser Printer கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
1. மேற்படி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Laser Printerகளின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.618 /2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 414 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**15)** மயிலாடுதுறை நகராட்சியில் குடிநீர் திட்ட பயன் பாட்டில் உள்ள **TN.51.K.5337** எண்ணுள்ள டேங்கர் லாரி வாகனத்திற்கு தகுதி சான்று முடிவுற்றமையால் இவ்வாகனத்தை தகுதிச் சான்று பெறத் தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,48,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
1. மேற்படி குடிநீர் திட்ட வகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.5350/2022/இ1**
**மன்றத் தீர்மானம் எண். 415 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**16)** மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலான்மை திட்ட பணிக்கு பயன் படுத்தப்படும் **TN.82 H.0328 எண்ணுள்ள** TATA ACE வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.60,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி திடக்கழிவு மேலான்மை திட்ட பணிக்கு பயன் படுத்தப்படும் வகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.5332/2022/இ1**
**மன்றத் தீர்மானம் எண். 416 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**17)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் போருத்தப்பட்டுள்ள 125 HP மின் மோட்டாரை இயங்க வைக்கக் கூடிய ATS soft starter இல் உள்ள Delta Contactor மற்றும் Oil Tranformer 2 எண்ணிக்கை பழுது ஏற்பட்டுள்ளதால் இவற்றினை உடனடியாக சீரமைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,48,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி குடிநீர்திட்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.4165/2022/இ1**
**மன்றத் தீர்மானம் எண். 417 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**18)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் உள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் NULM திட்டத்தின்கீழ் ரூ.72,00,000/– மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நோயாளிகளுடன் உடன் வருபவர் தங்கும் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு தேவையான அனுகுசாலையினை அமைக்க ஆகும். உத்தேச செலவினம் ரூ.4.20 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1211/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 418 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**19)** மயிலாடுதுறை நகராட்சி பொறியல் பிரிவு பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு 31.03.2023 உடன் பசுமைவரி மற்றும் சாலைவரி முடிவடைகின்றது. எனவே 01.04.2023 முதல் 31.03.2023 வரை ஓராண்டுக் காலத்திற்கு பசுமைவரி மற்றும் சாலைவரி புதுப்பிக்கப்பட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.54,963/– ஆகும். இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வாகன எண். | பசுமைவரி மற்றும் சாலைவரி |
|---|---|---|
| 1. | TN-51 – C – 3108 Sullage Lorry | ரூ.14300/– |
| 2. | TN-82 – K – 7349 Jetrod | ரூ.7716/– |
| 3. | TN-51 – S – 1077 JCB | ரூ.11020/– |
| 4. | TN-51 – K – 5337 Water Tanker | ரூ.7850/– |
| 5. | TN-51 – P – 0798 Jetrod | ரூ.14050/– |
| கூடுதல் | | ரூ.54,936/– |

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியினை வட்டார போக்குவரத்து அலுவலக இணைய தளத்தின் மூலம் தொகை ரொக்கமாக செலுத்த வேண்டிய காரணத்தினால் இச்செலவீனத்தை G.R.வாகன ஓட்டுனர் பயிற்சி நிறுவனம், பூம்புகார் சாலை மூலம் மேற்கொள்வதையும், வட்டார போக்குவரத்து அலுவலக இணைய தள பட்டியலின்படி மேற்படி செலவீனத்தொகை ரூ.54,936/–ஐ G.R.வாகன ஓட்டுனர் பயிற்சி நிறுவனத்திற்கு வழங்குவதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1161/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 419, நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**20)** மயிலாடுதுறை நகராட்சி வருவாய் நிதி, குடிநீர் திட்ட நிதி மற்றும் பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள 14.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | | வருவாய் நிதி | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்காக புதியதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஈப்பு வாகன எண். TN.82.L.5470 வாகனத்திற்கு தேவையான இதர உதிரி பாகங்கள் வாங்கி பொருத்தும் பணி. | 50,500/– | ஸ்ரீ கணேஷ் கார் அஸசரிஸ், மயிலாடுதுறை. | ரூ.48,500.00 (-) 0.00% மதிப்பீட்டு அளவு | ஸ்ரீ கணேஷ் கார் அஸசரிஸ், மயிலாடுதுறை. |
| | | | கணேஷ் கார் அஸசரிஸ், கும்பகோணம். | ரூ.54,550.00 (+) 12.36% அதிகம் | |
| 2. | மயிலாடுதுறை நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்காக புதியதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஈப்பு வாகன எண். TN.82.L.5518 வாகனத்திற்கு தேவையான இதர உதிரி பாகங்கள் வாங்கி பொருத்தும் பணி. | 49,000/– | ஸ்ரீ கணேஷ் கார் அஸசரிஸ், மயிலாடுதுறை. | ரூ. 48,550.00 (-) 0.00% மதிப்பீட்டு அளவு | ஸ்ரீ கணேஷ் கார் அஸசரிஸ், மயிலாடுதுறை. |
| | | | கணேஷ் கார் அஸசரிஸ், கும்பகோணம். | ரூ.54,550.00 (+) 12.36% அதிகம் | |
| 3. | மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு பயன்படுத்தப்படும் வாகன எண். TN.51.S.5146 வாகனத்திற்கு தகுதி சான்று பெறத்தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்வது. | 1,63,500/– | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ், மயிலாடுதுறை. | ரூ.1,38,100.00 (–) 0.00% மதிப்பீட்டு அளவு | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ், மயிலாடுதுறை. |
| | | | வாணி ஆட்டோ ஒர்க்ஸ், மயிலாடுதுறை. | ரூ.1,46,100.00 (+) 5.79% அதிகம். | |
| 4. | மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN.82.H.0328 TATA ACE வாகனம் தகுதி சான்று பெறத்தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி. | 60,000/– | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ், மயிலாடுதுறை. | ரூ.59,200.00 (–) 0.00% மதிப்பீட்டு அளவு | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ், மயிலாடுதுறை. |
| | | | அமரா ஆட்டோ ஒர்க்ஸ், மயிலாடுதுறை. | ரூ.64,700.00 (+) 9.29% அதிகம். | |
| | | | குடிநீர் திட்ட நிதி | | |
| 5. | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர்திட்ட பராமரிப்பு பணியின் கீழ் குடிநீர் பகிர்மான குழாய்களில் அவ்வபோது எதிர்பாராத விதமாக ஏற்படும் நீர் கசிவு குடிநீர் குழாய் உடைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 6 பணியாளர்களை அமைக்கும் பணி. | 3,50,000/– | திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி. | ரூ.2,53,000.00 (-) 0.00% மதிப்பீட்டு அளவு | தி ரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி. |
| | | | S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை. | ரூ.2,75,000.00 (+) 8.70% அதிகம் | |
| 6. | மயிலாடுதுறை நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ள ஸ்கார்ப்பியோ வாகன எண். TN.82.L.5488 வாகனத்திற்கு தேவையான இதர உதிரி பாகங்கள் வாங்கி பொருத்தும் பணி. | 74,000/– | ஸ்ரீ கணேஷ் கார் அஸசரிஸ், மயிலாடுதுறை. | ரூ.74,000.00 (–) 0.00% மதிப்பீட்டு அளவு | ஸ்ரீ கணேஷ் கார் அஸசரிஸ், மயிலாடுதுறை. |
| | | | கணேஷ் கார் அஸசரிஸ், கும்பகோணம். | ரூ.79,500.00 (+) 7.43% அதிகம். | |
| 7. | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டப் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN.59.K.5337 குடிநீர் லாரி வாகனம் தகுதி சான்று பெறத்தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி | 1,48,000/– | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ், மயிலாடுதுறை. | ரூ.1,47,600.00 (–) 0.00% மதிப்பீட்டு அளவு | இளங்கோ ஆட்டோ மொபைல்ஸ், மயிலாடுதுறை. |
| | | | வாணி ஆட்டோ ஒர்க்ஸ், மயிலாடுதுறை. | ரூ.1,53,600.00 (+) 4.07% அதிகம். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின்கீழ் முடிகண்டநல்லூர் கொள்ளிடம் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கு புதியதாக 120 HP மின்மோட்டார் பம்பு இரண்டு எண்ணம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றினை பொறுத்துவதற்கு தேவையான பைப்புகள் மற்றும் இதர உபகரணங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து பொறுத்தும் பணி. | ரூ.4,00,000 | **டெக்கான் இன்டஸ்டிரீஸ், கோயம்புத்தூர்** | **ரூ.3,38,982.00 (–) 0.00% மதிப்பீட்டு அளவு** | **டெக்கான் இன்டஸ்டிரீஸ், கோயம்புத்தூர்** |
| | | | **வேல் பம்செட், கோயம்புத்தூர்** | **ரூ.3,39,600.00 (+) 0.01% அதிகம்.** | |
| 9. | மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் பொறுத்தப்பட்டுள்ள 125 HP மின்மோட்டாரை இயங்க வைக்கக் கூடிய ATS Soft Starter இல் உள்ள Delta Contractor மற்றும் Oil Tranformer 2 எண்ணிக்கை பழுது ஏற்பட்டுள்ளதை உடனடியாக சீரமைக்கும் பணி. | ரூ.2,48,000 | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ.1,90,000.00 (-) 0.00% மதிப்பீட்டு அளவு** | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.2,04,000.00 (+) 7.37% அதிகம்** | |
| | **பாதாள சாக்கடை திட்ட நிதி** | | | | |
| 10. | மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN.82.J.0077 சில்ட் மெஷின் தகுதி சான்று பெறத்தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி. | 1,18,000 | **வீ.வீ.மோட்டார்ஸ். திருவாரூர்.** | **ரூ.1,16,724.00 (–) 0.00% மதிப்பீட்டு அளவு** | **வீ.வீ.மோட்டார்ஸ். திருவாரூர்.** |
| | | | **வீ.வீ.மோட்டார்ஸ். மயிலாடுதுறை.** | **ரூ.1,23,724.00 (+) 6.00% அதிகம்.** | |
| 11. | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.24, திருவாரூர் சாலையில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தில் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணி. | 55,000 | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ. 51,134.52 (-) 0.14% குறைவு** | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.51,450.04 (+) 0.62% அதிகம்** | |

**<u>அலுவலககுறிப்பு</u> :** 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.4166/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 420 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**21) மயிலாடுதுறை நகராட்சி வருவாய் நிதி மற்றும் குடிநீர் திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 17.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

| வ எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | **வருவாய் நிதி** | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சியில் வாகன போக்கு வரத்து அதிகமுள்ள இடங்களில் வேகத்தடை அமைக்கும் பணி. | 3,00,000/– | **திரு.க.செந்தில். ஒப்பந்தகாரர் மயிலாடுதுறை.** | **ரூ.2,48,855.81 (-) 0.05% குறைவு** | **திரு.க.செந்தில் ஒப்பந்தகாரர் மயிலாடுதுறை.** |
| | | | **திரு.E.கண்ணன். ஒப்பந்தகாரர் மயிலாடுதுறை.** | **ரூ.2,49,455.81 (+) 0.24% அதிகம்** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **2.** | மயிலாடுதுறை நகராட்சி தருமபுரம் சாலையில் கட்டப்பட்டு வரும் அறிவுசார் மையம் மற்றும் நூலகத்தை சுற்றி நடைபாதை அமைக்கும் பணிக்காக காண்கிரிட் பக்க சுவர் கட்டும் பணி மற்றும் கிராவல் மண் கொண்டு தரை மட்டம் உயர்த்தும் பணி மற்றும் புதிய மின் கம்பங்கள் மூலமாக மூம்முனை மின்சார இணைப்பு பெறும் பணி. | 9,50,000/– | **திரு.ஜி.உத்திராபதி. ஒப்பந்தகாரார் மயிலாடுதுறை.** | **ரூ. 7,94,150.00** (-) 0.05% குறைவு | **திரு.ஜி.உத்திராபதி. ஒப்பந்தகாரார் மயிலாடுதுறை.** |
| | | | **எஸ்.வி.எஸ்.இஞ்ஜினியாரிங் காண்ட்ராக்டர்ஸ், மயிலாடுதுறை.** | **ரூ.7,95,564.00** (+) 0.18% அதிகம் | |
| **3.** | மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் பழுதடைந்துள்ள 13 எண்ணிக்கையிலான பொதுகழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை சீரமைக்கும் பணி. | 9,50,000/– | **திரு.க.செந்தில். ஒப்பந்தகாரார் மயிலாடுதுறை.** | **ரூ. 7,89,845.28** (-) 0.09% குறைவு | **திரு.க.செந்தில். ஒப்பந்தகாரார் மயிலாடுதுறை.** |
| | | | **திரு.E.கண்ணன். ஒப்பந்தகாரார் மயிலாடுதுறை.** | **ரூ.7,94,691.76** (+) 0.61% **அதிகம்** | |
| **4.** | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.11இல் உள்ள மேல ஒத்த சரகு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 9,20,000/– | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ.7,66,860.39** (-) 0.04% குறைவு | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.7,69,782.38** (+) 0.38% **அதிகம்** | |
| **5.** | மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.1இல் உள்ள கே.கே.ஆர் நகரில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 9,00,000/– | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ.7,46,852.39** (-) 0.04% குறைவு | **தி ரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.7,49,766.99** (+) 0.39% **அதிகம்** | |
| **6.** | மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் உள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் NULM திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள நோயாளிகளுடன் உடன் வருபவர் தங்கும் கட்டிடத்திற்கு தேவையான அனுகுசாலை அமைக்கும் பணி. | 4,20,000/– | **திருமதி.கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** | **ரூ.3,35,565.00** (-) 0.04% குறைவு | **திருமதி.கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.3,36,115.00** (+) 0.16% **அதிகம்** | |
| | | **குடிநீர் திட்ட நிதி** | | | |
| **7.** | மயிலாடுதுறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 4 எண்ணிக்கை Laser Printer கொள்முதல் செய்யும் பணி. | 2,00,000/– | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** | **ரூ.198000.00/–** (–) 0.00 % மதிப்பீட்டு அளவு | **திரு.எஸ்.சந்தோஷ், ஒப்பந்ததாரர், சீர்காழி.** |
| | | | **S. முத்துசாமி காண்ட்ராக்டர், மயிலாடுதுறை.** | **ரூ.200000.00 /–** (+) 1.01 % அதிகம் | |

**அலுவலககுறிப்பு :** 1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.695/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 421 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**22)** மயிலாடுதுறை நகராட்சியில் வருவாய் நிதியின்கீழ், கீழ்க்கண்ட பணிக்கு 14.09.2022 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ளவர் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சியில் தமிழக முதல்வர் அவர்களின் காலை சிற்றுண்டி திட்டத்தின் தொடக்க விழா ஏற்பாடுகள் மேற்கொள்வது. | ரூ.2,60,000/– | S. வீராச்சாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ. 2,71,500/– (+) 4.45 % அதிகம் | திரு.ஜி.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. |
| | | | திரு.ஜி.உத்திராபதி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ. 2,47,700/– (–) 4.27 % குறைவு | |
| | | | திருமதி.கு.சசிராணி, ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ. 2,98,000/– (+)14 .62 % அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு:</u>

1. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் னுமதி பெற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்: 3731/2022/இ1,**

**<u>மன்றத் தீர்மானம் எண். 422 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**23)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியில் மணல்மேடு கொள்ளிடம் ஆற்றில் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் நீரேற்றம் செய்து இந்நகராட்சி பகுதியில் உள்ள வரதாச்சாரியார் பூங்கா மேல்நிலை நீர்தேக்க தொட்டி, கே.கே.ஆர் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி, மாமரத்து மேடை மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் பாரதி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஆகிய இடங்களில் தினசர் குடிநீர் வால்புகளை திரந்து/மூடி இயக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் விலைவிகிதத்தில் பணியாளர்கள் சப்ளை செய்யும் பணி **திரு.A.சட்டையப்பன்** ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது குடிநீர், மின்சாரம், பாதாள சாக்கடை போன்ற பராமரிப்பு பணிகளுக்கு **Out Sourcing** முறையில் பணியாளர்கள் நியமித்துக்கொள்ள திட்டக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதால், அரசின் உரிய ஒப்புதல் கிடைக்கும் வரை, மேற்கண்ட மாவட்ட ஆட்சியர் விலைவிகிதத்தில் பணியாளர்கள் சப்ளை செய்யும் பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்தகாரர் மூலம் அதே விலை விகிதத்தில், மேலும் 6 மாத காலத்திற்கு (ஏப்ரல் 2023 முதல் செப்டம்பர் 2023 வரை) கால நீட்டிப்பு செய்திடவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை **ரூ.9.20** இலச்சத்திற்கும், இதற்காகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2155 /2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 423, நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**24)** மயிலாடுதுறை நகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணியின் கீழ் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி M/s. Versatile Engineering Services, Mayiladuthurai நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்சமயம் நகராட்சியின் குடிநீர் மற்றும் பாதாளசாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளுக்கு Out Sourcing முறையில் பணியாளர்களை நியமித்துக்கொள்வது தொடர்பான திட்ட பிரேரணை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதற்கான அரசாணை பெறப்படும் வரை குறிகிய காலத்திற்கு (ஏப்ரல் 2023 முதல் ஜீலை 2023 வரை) நான்கு மாத காலத்திற்கு ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்த நிறுவனமான M/s. Versatile Engineering Services, Mayiladuthurai மூலம் தொர்ந்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.44.25 இலட்சத்தை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2155 /2022/இ1**
<u>**மன்றத் தீர்மானம் எண். 424, நாள்: 30.03.2023**</u>

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**25)** மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண்.112/செ.ம.தொ.அ/2022, நாள்.09.12.2022ல் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தமிழக அரசின் சாதனைகளை விளக்கிடும் வகையில் விளம்பர பதாகைகள் அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதிகளில் 5 இடங்களில் மேற்படி விளம்பர பதாகைகள் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவீனம் – ரூ.1,30,000/- ஆகும். இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> : மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண். /2022/இ1**
<u>**மன்றத் தீர்மானம் எண். 425 நாள்: 30.03.2023**</u>

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**26)** மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலாடுதுறை அவர்களால் 06.03.2023 அன்று மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரகத்தில் நடத்தப்பட்ட சாலை பாதுகாப்பு குழு ஆய்வு கூட்டத்தில், மயிலாடுதுறை நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலைகளை சீரமைத்தல், பேருந்து கால அட்டவணை ஒட்டுதல், பேருந்து நிலையத்தில் மக்கள் நிற்க ஏதுவாக பேருந்து நிழற்கூரை அமைத்தல் மற்றும் மாற்று திறனாளிகள் பேருந்தில் ஏற சாய்வு தள வசதி அமைத்தல் ஆகிய பணிகளை உடனடியாக இந்நகராட்சியின் மூலம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவீனம் ரூ.9.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2022/இ1**
<u>**மன்றத் தீர்மானம் எண். 426 நாள்: 30.03.2023**</u>

**அலுவலக குறிப்பு: <u>அனுமதிக்கப்பட்டது.</u>**

**27)** மயிலாடுதுறை நகராட்சி S.N.G நகர் பூங்கா மேம்படுத்தும் பணி KNMT திட்டம் 2022-2023ன் கீழ் ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது, இதில் மேற்படி பூங்கா இடம் அருகில் உள்ள குடியிருப்புகளை விட பள்ளமாக உள்ளது, இதனால் மழைக்காலங்களில் மழைநீர் பூங்காவிற்குல் தேங்கும் நிலை ஏற்படும். எனவே, அருகில் உள்ள குடியிருப்புகள் தரை மட்டத்திற்கு பூங்காவின் தரை மட்டத்தினை உயர்த்திட ஏதுவாக 'இடிந்த மண்' (Debries) கொண்டு நிரப்பி பூங்கா தரை மட்டத்தினை உயர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவீனம் ரூ.9.12 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 427 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**28)** மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 230 எண்ணிக்கையிலான ஆழ்துளை கிணறு மற்றும் மின் விசை பம்ப் (Mini Power Pump with bore well and Sintex Tank) மூலம் நகரின் அனைத்து பகுதிகளிலும் கூடுதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்கொழுது கோடை காலம் என்பதால் குடிநீர் தேவையின் அவசியம் கருதி இவற்றை பராமரிப்பு செய்திடவும், அவ்வபோது ஏற்படும் பழுதுகளை கண்டறிந்து உடன் சரிசெய்திடவும் 2023-2024ம் நிதியாண்டிற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சம் ஆகும் இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 428 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**29)** மயிலாடுதுறை நகராட்சி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2021-2022 ன் கீழ் வட்டார போக்குவரத்து அலுவலர் (RTO) அலுவலகத்தில் பொதுமக்கள் காத்திருக்கும் அறை அமைக்க ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது, ஆனால் அவ்வலுவலகத்தில் போதிய காத்திருக்கும் இடங்கள் (மேற்கூறையுடன்கூடியது) இருப்பதால், பதிவறை (Record room) கட்டிதருமாறு கேட்டுக்கொண்டார், அதன்படி பதிவறை (Record room) அமைக்கும் பணி மேற்கொண்டதால் கூடுதல் செலவீனம் ஏற்பட்டுள்ளது இதன் உத்தேச செலவீனம் ரூ.2.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 429 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**30)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் உள்ள பயணிகள் நிழற்குடைகளில் 5 எண்ணிக்கையிலான பயணிகள் நிழற்குடைகளை பராமரிப்பு செய்து விளம்பரம் செய்து கொள்ள மயிலாடுதுறை நாராயணன் ஜீவல்லரி நிறுவனத்தார் அனுமதி கோரியுள்ளதன் படி இந்நகராட்சி பகுதியில் உள்ள 1. காவேரி நகர் பயணிகள் நிழற்குடை, 2.செங்கழநீர் பிள்ளையார்கோயில் பயணிகள் நிழற்குடை, 3.சுந்தரம் தியேட்டர் பயணிகள் நிழற்குடை, 4. கூறைநாடு பயணிகள் நிழற்குடை, 5.பேருந்து நிலையம் அண்ணாசிலை ஆகிய 5 இடங்களில் மயிலாடுதுறை நாராயணன் ஜீவல்லரி நிறுவனத்தார் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு விளம்பரம் செய்து கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் முடிவுசெய்யலாம்.

2. பழுது நீக்கம் செய்யம் பணிகள் அணைத்தும் பொறியியல் பிரிவு அதிகாரிகளின் அறிவுறைகள் படி மேற்கொள்ள வேண்டும், விளம்பரங்கள் போக்கு வரத்து மற்றும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாதவாரு அமைக்ககப்பட வேண்டும்.எம்பரங்கள் கண் கூசும் வண்ணம் அமைக்கக்கூடாது.

3. ஒருண்டு காலத்திற்கு மட்டுமே விளம்பரம் செய்து கொள்ள அனுமதி, ஓராண்டிற்கு பின் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும், விளம்பர நிறுவனத்தால் செய்யப்பட்ட பணிகளுக்கு எவ்வித உரிமமும் கொண்டாட கூடாது.

4. மின்சாரம் மற்றும் அதன் தொடர்பான பணிகள் மற்றும் செலவீனங்கள் மனுதாரர் நகராட்சி ஆணையர் பெயரில் மேற்கொள்ள வேண்டும். அனைத்து பிற துறைகள் சம்மந்தப்பட்ட செலவீனங்கள் ஆணையர் பெயரில் மனுதாரர் மேற்கொள்ள வேண்டும். இந்நகர் மன்றத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும் தொகையினை மனுதாரர் செலுத்திட கடமைப்பட்டவராவார்.

**ந.க.எண். /2023/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 425 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**31)** மயிலாடுதுறை நகராட்சி திடக்கழிவு மேலான்மை திட்ட பணிக்கு பயன் படுத்தப்படும் 6 எண்ணிக்கை LCV வாகனங்களில் தற்சமயம் மூன்று எண்ணிக்கை LCV வாகனங்கள் தகுதி சான்று பெறத்தக்க வகையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,66,016/– ஆகும். அதல் விபரம் பிவருமாறு.

**1.TN.82 J.8586 - ரூ.61,974/–**
**2. TN.82.H.0320- ரூ.83,100/–**
**3. TN.82.H.0463- ரூ.1,21,016/–**

மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/இ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 431 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**32)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.33–ல் உள்ள தோப்புதெரு மற்றும் செம்மங்குளம் கீழ் கரை சந்திப்பில் சிறுபாலம் அமைக்க இந்நகர் மன்ற தீர்மான எண்.93, நாள்.27.05.2022ல் அனுமதி வழங்கியதன் படி இப்பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவீனம் ரூ.8.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/இ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 432 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**33)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.33–ல் உள்ள செம்மங்குளம் கீழ் கரை மற்றும் நெ.1 சாலை சந்திப்பில் சிறுபாலம் அமைக்க இந்நகர் மன்ற தீர்மான எண்.93, நாள்.27.05.2022ல் அனுமதி வழங்கியதன் படி இப்பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவீனம் ரூ.5.00 இலட்சம் ஆகும், இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2023/இ1**
**<u>மன்றத் தீர்மானம் எண். 433 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**34)** மயிலாடுதுறை நகராட்சி மூலம் மணக்குடி கிராமத்தில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தில் அதி நவீன வசதிகளுடன் கூடிய பொதுக்கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்ள மாநில அளவிள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பட்டியல் தொகை ரூ.42,263/–ஐ வழங்கிட கோரி Vibraz adz Chennai நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது, மேற்படி பட்டியல் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து Vibraz adz Chennai நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 5530/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 434 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**35)** மயிலாடுதுறை நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவிற்கு 2023–ஆம் ஆண்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் பொருட்கள் சப்ளை செய்திடுவதற்கு 27.03.2023–அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **மதிப்பீடு ரூ** | **ஒப்பந்தப்புள்ளி அறித்துள்ள நிறுவனத்தின் பெயர்** | **நீர்த்த சுண்ணாம்பு , பிளீச்சிங் பவுடர் விலைவிகிதம்** | **குறைவாக அறித்துள்ள நிறுவனம்** |
|---|---|---|---|---|
| **1** | **5.00 லட்சம்** | **MRR Suppliers Govt. Supply contractors No.207, Strahans road, Pattalam, Chennai.** | **ரூ. 499432/–** | **MRR Suppliers Govt. Supply contractors No.207, Strahans road, Pattalam, Chennai.** |
| **2** | | **RK Entrerprises. Govt. Suppliers & Contractors 5/3 Foxen street, Perambalur, Chennai.** | **ரூ. 500464.50** | |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி, வ.எண். (1)–ல் கண்டுள்ள MRR Suppliers Govt. Supply contractors என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:</u>** 1. அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2629/2022/எச்1)**
**<u>மன்றத் தீர்மானம் எண். 435 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**36)** மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் அ/மி மயூரநாதர் உடனுறை அபயாம்பிகை திருக்கோயில் ஐப்பசி மாத கடைமுழுக்கு உற்சவத்திற்கு தற்காலிக உடைமாற்றும் வசதி மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் இருபாலருக்கும் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும். உத்தேச செலவினம் ரூ.85,000/– ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விளைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.3731/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 436 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**37)** மயிலாடுதுறை நகராட்சி பொயியல் பிரிவு பராமரிப்பில் உள்ள நகர்மன்ற தலைவரின் பயன்பாட்டிற்காக புதியதாக கொள்முதல் செய்யப்பட்ட TN-82-L-5488 எண்ணுள்ள **Scorpio** வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு 6000 கி.மீ மேல் இயக்கப்பட்டுள்ளதால் இதனை முதலாம் பராமரிப்பிற்கு அனுப்பப்பட்டதில் **Scorpio** நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான **SRS Cars PVT, Ltd., Thanjavur** நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.8599 /– செலுத்திடக் கோரப்பட்டுள்ளது. எனவே இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1333/2023/இ1**

**மன்றத் தீர்மானம் எண். 437 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**38)** இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களில் 1988–ம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு நிலுவைத்தொகையாக ரூ.44,27,259/– உள்ளது. அதில் குத்தகைதாரர்களின் பெயர் கடை எண் மற்றும் நிலுவைத்தொகை விவரம் மட்டுமே கணினி கேட்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குத்தகைதாரர்கள் நடத்தி வந்த குத்தகை இனத்தின் கோப்புகள் இல்லாததாலும், குத்தகைதாரர்களின் முகவரி, அடையாள அட்டை என எவ்வித விவரம் இன்றியும், 25 ஆண்டுகள் கடந்த நிலையில், எந்தவித சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளதால், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 118–ன்படியும், வருவாய் ஆய்வர் மற்றும் சிறப்பு வருவாய் ஆய்வர்கள் ஆய்வு செய்து அளித்த சான்றின்படியும், நிலுவைத்தொகை ரூ.44,27,259/– யை வரியில்லா இனம் கேட்பு பட்டியலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4087/2022/அ2**

**மன்றத் தீர்மானம் எண். 438 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**39)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீரூந்து நிலையம் எண்.8,4 மற்றும் தற்காலிக ஆள்நுழைவு தொட்டி, கழிவு நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள 50HP, 30HP, 10HP, 4HP, தலா ஒரு எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் மின் அழுத்தம் சீரான முறையில் இல்லாத காரணத்தினால் பழுதடைந்துள்ளது. இதனால் இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் கழிவு நீரினை உரிய முறையில் நீரேற்றம் செய்வது பெரிதும் பாதிப்படைய வாய்ப்பு உள்ளது. இதனால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படக்கூடும் என்பதால் இந்நகராட்சி பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி மேற்படி மின் மோட்டார்களை போர்கால அடிப்படையில் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசிம் கருதி இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியின் கீழ் ரூ.9.72 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண்.15ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் :** 4594 / 2022 / இ1

**மன்றத் தீர்மானம் எண். 439 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**40)** மயிலாடுதுறை நகராட்சியில் வருவாய் நிதியின்கீழ், கீழ்க்கண்ட பணிக்கு 12.08.2022 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ளவர் பெயர் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளவர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | மயிலாடுதுறை நகராட்சியில் 75–வது சுதந்திரத் தின அமுதப்பெருவிழாவினை முன்னிட்டு மணிக்கூண்டு மற்றும் சின்னக்கடைத் தெருவில் அமைக்கப்பட்டுள்ள ஸ்துபி ஆகியவற்றிக்கு வர்ணம் பூசுதல் மற்றும் அலங்கார மின் விளக்குகள் அமைக்கும் பணி. | ரூ.1,80,000/– | S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. | ரூ. 1,78,200/– (–) 0.01 % குறைவு | திரு S. முத்துசாமி ஒப்பந்ததாரர், மயிலாடுதுறை. |
| | | | திருமதி கலையரசி, மயிலாடுதுறை. | ரூ. 1,87,400/– (+) 4.00 % அதிகம் | |
| | | | திரு.முருகேசன், மயிலாடுதுறை | ரூ. 1,85,100/– (+) 2.80 % அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு:</u> 1. மன்றம் அனுமதிக்கலாம்,

2. பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணிக்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்: 3772/2022/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 440 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**41)** மயிலாடுதுறை நகராட்சி உரக்கிடங்கில் குவிந்துள்ள பழங்கால குப்பைகளை உயிரிய செயலாக்கம் முறையில் அகற்றிட அண்ணா பல்கலைகழகம் மூலம் இரண்டாம் கட்டமாக அளவீடு செய்யப்பட்ட 31127 M3 பழங்கால குப்பைகளை தூய்மை இந்திய திட்டம் (நகரம் 2.0) திட்டத்தின் கீழ் உயிரிய செயலாக்கம் முறையில் அகற்றிட ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு "M/S.Parisudh Eco Concepts Pvt Ltd, Chennai" என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளதில் தற்பொழுது அகற்றப்பட உள்ள பழங்கால குப்பைகளை அளவீடு செய்யும் பணிகள் நடைபெறும் பொழுது உரிய தொழில்நுட்ப அறிக்கையினை அளிக்க The Director, Centre of Environmental Studies, Anna University, Chennai – 25, கேட்டுக் கொள்ளப்பட்டதில் மேற்படி Anna University, நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.5.31 இலட்சம் ஆய்வு கட்டணமாக வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே மேற்படி தொகை ரூ.5.31 இலட்சத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4421/2015/இ1**

**<u>மன்றத் தீர்மானம் எண். 441 நாள்: 30.03.2023</u>**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது.**

**42) 36-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. ஆனந்தி ஆனந்தகுமார் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட பெசன்ட் நகரில் 10 EB Post உடைந்து விழும் தருவாயில் உள்ளதை சரிசெய்யது தர மன்றம் தீர்மானிக்க,

2. தனது வார்டுக்குட்பட்ட நேரு தெருவில் சாலைகள் பழுதடைந்துள்ளதால் புதிய தார்சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க,

3. தனது வார்டுக்குட்பட்ட செண்பகத்தெருவில் மூன்று வேகத்தடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க,

4. தனது வார்டுக்குட்பட்ட பிள்ளையார்தோட்டத்திர்ல மினி பவர் பம்ப் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க,

5. தனது வார்டுக்குட்பட்ட புளியந்தெருவில் ஆங்காங்கே சாலைகளில் பள்ளம் விழுந்து உள்வாங்கி வருவதை சரி செய்துதர மன்றம் தீர்மானிக்க,

**மன்றத் தீர்மானம் எண். 442 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**43) 33-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ஆர். நடராஜன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. தனது வார்டுக்குட்பட்ட தோப்புத்தெரு பழுதடைந்த பொது கழிப்பிடத்தை அகற்றிவிட்டு புதிய ரேசன் கடை அமைக்கவும், மீதி இடத்தில் 3 வணிக கடை கட்டித்தரவும் மன்றம் தீர்மானிக்க,

2. தனது வார்டுக்குட்பட்ட கடந்த ஆகஸ்ட் 26, 2022–ல் நடைபெற்ற நகர சபை கூட்டத்தின் நெ. – ன்படி வாணியத் தெருவில் 3 வேகத்தடை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க,

3. தனது வார்டுக்குட்பட்ட வாணியதெரு முதல் தோப்பு தெரு, செம்மங்குளம் கீழ்கரை, நெ.1 சாலை வரை மழைநீர் வடிகாலை சீர் செய்து தர மன்ற தீர்மானிக்க.

4. தனது வார்டுக்குட்பட்ட பஞ்சுக்காரத்தெரு மடத்து சந்து மினிபவர் பம்பின் தரை தளம் குழாய் மற்றும் திருகுகளை பழுது நீக்கம் செய்து தர மன்றம் தீர்மானிக்க,

**மன்றத் தீர்மானம் எண். 443 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**44) 02-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ச. கணேசன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட பரிமள ரெங்கநாதர் கோவில் வாசலில் உள்ள மினி பவர் பம்ப் பழுதாகிவிட்டதால் பெருமாள் கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் கோவில் மதிய உணவு உண்ணும் ஏழைகள் 100 க்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளதால், 23–வது திவ்ய தேசமான புகழ்பெற்ற பரிமள ரெங்கநாதர்கோவில் வாசலில் புதியதாக மினிபவர் பம்ப் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 444 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: புதியதாக மினிபவர் பம்ப் அமைத்திடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.**

**45) 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. கீதா செந்தில்முருகன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

**1.** தனது வார்டுக்குட்பட்ட L.B. நகர் பட்டிக்காரன் குட்டையிலிருந்து காவிரிக்கு செல்லும் வடிகால் Pipe–ன் அளவு சிறியதாக உள்ளதால் அதனை சட்ரஸ் type –ல் மாற்றி அமைத்துர தர மன்றம் தீர்மானிக்க.

**2.** தனது வார்டுக்குட்பட்ட ஆலமரத்தடி தெருவில் இருந்து பனஞ்சேரி சாலையில் உள்ள இடுகாட்டில் மினிபவர் பம்ப் அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**3.** தனது வார்டுக்குட்பட்ட குமாரசாமி பிள்ளை தெருவில் சிமெண்ட் சாலை (1 way road ) அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 445 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**46) 20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. தனலெட்சுமி அரங்கநாதன் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

1. **20-வது வார்டுக்குட்பட்ட பூங்காக்கள்**

**1.** அண்ணாநகர் பூங்கா
**2.** ராமஜெயபுரம் நகர் பூங்கா
**3.** மூர்த்தி நகர் பூங்கா
**4.** ஆர்.பி.என். நகரில் உள்ள வெற்றிவிநாயகம் நகர் பூங்கா

இந்த நான்கு பூங்காக்களுக்கும் எந்த ஒரு அடிப்படை வசதியும் இல்லாததால், இந்த பூங்காக்களுக்கு சுற்றுசுவர் எடுத்து பூங்கா எடுத்துதர வேண்டி மன்றம் தீர்மானிக்க.

2. தனது வார்டுக்குட்பட்ட **1.** பெரிய சந்து **2.** புது அக்ரஹாரம் விரிவாக்கம், **3.** திருவள்ளுவர் நகர் கடைசி தெரு ஆகிய இடங்கள் மண்ரோடாக இருப்பதால், பொதுமக்கள் நலன்கருதி இந்த தெருக்களில் தரமான தார்சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**3.** தனது வார்டுக்குட்பட்ட பெரிய சந்து மழைநீரில் பக்க வடிகால் கால்வாய் உடைந்து கிடப்பதால் மழைக்காலங்களில் மழைநீர் அதனை சுற்றியுள்ள அண்ணாநகர், அப்துல்கலாம் நகர், பெரியசந்து ஆகிய இடங்களில் மழைநீர் சூழ்ந்துள்ள காரணத்தால் வடிநீர் கால்வாய் புதியதாக கட்டி தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 446 நாள்: 30.03.2023**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது. நிதிநிலைக்கு ஏற்ப பணிகள் செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**47) 30-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. சக்தி விஜய் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

**1.** தனது வார்டுக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் தொடக்கப்பள்ளி வகுப்பறையில் மழை காலங்களில் மழைநீர் வராமல் இருக்க, வகுப்பறையில் காங்கீரிட் தளத்தை சரி செய்து பள்ளியை சீர் செய்ய மன்றம் தீர்மானிக்க.

**2.** தனது வார்டுக்குட்பட்ட தனியூர் குடியிருப்பில் உள்ள 2 மினிபவர்கள் சேதமடைந்து செயல்படாமல் உள்ளது. கோடைகாலமாக இருப்பதால் அதனை உடனடியாக சரிசெய்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத் தீர்மானம் எண். 447 நாள்: 30.03.2023.**

**அலுவலக குறிப்பு: பள்ளிக்கட்டிடத்தினை சீர் செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. மினிபவர் பம்பு சீர்செய்திடுவதற்கும் அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்./ ந.செல்வராஜ்)
நகரமன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர் (பி)
மயிலாடுதுறை நகராட்சி.